# நான் இரட்சிக்கப்படுவது எப்படி?
# "How can I be saved"

"அவர்களை வெளியே அழைத்து வந்து; ஆண்டவரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்".

அப்போஸ்தலர் (16:30,31)

அன்புள்ள வாசகரே,

நான் உங்கள் நேரத்தை கொஞ்சம் எடுத்துக்கொள்கிறேன். இந்த முக்கியமான கட்டுரை இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பற்றி பேசுகிறது. கடந்த காலத்தைப் போலவே இன்றும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்களுடைய வாழ்க்கையில் அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிற பலரும் தேவனுடைய நித்திய வாழ்வை அனுபவிக்க முடியும். நீங்கள் கேட்கலாம், நான் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்? அதற்கான காரணம் தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிறது. ஏனெனில் இரட்சிப்பின் மூலம் மட்டுமே ஒருவர் பரலோக இராஜ்ஜியத்தை அணுகமுடியும். ஒருவர் சொர்க்கத்தை நோக்கி நடக்கவில்லை என்றால் நரகத்தை நோக்கி நடப்பதை தவிர வேறு எதுவும் இல்லை. இந்த காரணத்திற்காக, இயேசு மத்தேயு 7:13 இல் கூறினார்.

"இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்". ஆகையால் இரண்டு வாசல்கள் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. ஒன்று அகலமானது. மற்றொன்று குறுகியது. அகலமான வழியுடன் கூடிய பரந்த வாசல் அழிவுக்கு வழி வகுக்கிறது. இந்த அகலமான பாதையில் உலகின் சிற்றின்பம் மற்றும் பாவம் நம்மை அழிவுக்கு வழி வகுக்கிறது. இதற்கெல்லாம் முடிவு நியாயத்தீர்ப்பு மற்றும் அக்கினி கடல் (வெளி 2:15). இடுக்கமான வாசல் வழி நம்மை சொர்க்கத்திற்கு அழைத்து செல்கிறது. இந்த பாதையில் பாவமில்லை, தேவனின் வார்த்தை உள்ளது. தேவனுடைய அன்பும், அவருடைய இரக்கமும் நம்மேல் உள்ளது. இந்த பாதையின் முடிவு நம்மை சொர்க்க இராஜ்ஜியத்திற்கு கொண்டு செல்லவிருக்கிறது. இப்பொழுது நான் என்னை கேட்டுக்கொள்கிறேன், எந்த பாதைகளை நான் தேர்வு செய்வது? அன்பு நண்பரே, நான் ஏற்கனவே இடுக்கமான வாசல் வழியை தேர்ந்தெடுத்துள்ளேன், தேவனை நோக்கி செல்லும் குறுகிய பாதை எனக்கு இரட்சிப்பை கொடுக்கும். அகலமான பாதையில் நான் நடக்க விரும்பவில்லை. இந்த நாட்களில் உள்ள சில சிற்றின்பம் மற்றும் உலக ஆசைகள் அதனுடைய முடிவு நரகத்தின் நெருப்பாகும். மாறாக நான் குறுகிய பாதையை நோக்கி நடக்கிறேன். அது தேவன் இருக்கும் இடம், அங்கே அவருடன் தேவ தூதர்கள் இருக்கிறார்கள். அங்கு ஏமாற்றமோ, சோகமோ இல்லை. ஆனால் அனைத்தும் சந்தோஷம், சமாதானம் மற்றும் அன்பு மட்டுமே அங்கே இருக்கிறது. இப்போது நான் எப்படி அந்தப் பாதையில் செல்ல முடியும்? அது என்னை சொர்க்கத்திற்கு அழைத்து செல்கிறதா? ஒரே ஒரு வழிதான் கர்த்தர் தம்முடைய வார்த்தையில் நமக்குச் சொல்கிறார் (அப்போஸ்தலர் 16 : 31). "அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்".

இதை எனக்கு எப்படி பயன்படுத்துவது? என அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார் (ரோமர் 10 : 9). "ஏனென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயிலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்".

அன்புள்ள வாசகரே,

அதனால் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தார், அதனால் நாம் அவருடைய நாமத்தை விசுவாசித்து, நம்முடைய பாவங்களை அவரிடத்தில் அறிக்கையிடுவதின் மூலம் நம்முடைய ஆத்துமாக்களில் இரட்சிக்கப்பட முடியும். உண்மையில் அது எழுதப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் : 4:12). "அவராலேயன்றி (இயேசு) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயில்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்". இப்போது இந்த ஆய்வறிக்கையை படிக்கிற நீங்கள் நான் உங்களை ஒரு நல்ல முடிவு எடுக்கும்படி விரும்புகிறேன். இந்த கட்டுரையை வெறுக்காதீர்கள், இதுவே உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு. இரட்சிப்பு இலவசமாக வழங்கப்படுகிறது. இது தேவன் மனித குலத்திற்குக் கொடுத்த மிகப் பெரிய பரிசுத்த நித்திய வாழ்வு. கர்த்தருடன் நித்தியமாக வாழ்வது, அதை விட பெரியது எதுவுமில்லை. ஒரு கேள்வியை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள், நீங்கள் முன்பு எப்படி உணருகிறீர்கள், தேவன் உங்கள் ஆத்துமாவை அழைத்தால் நீங்கள் அவரை சந்திக்க தயாரா? நானும் இந்த கேள்விகளை என்னிடமே கேட்டுக்கொண்டேன், இயேசு இல்லாமல் என்னை பார்த்தேன். நான் ஒரு பாவியாக காணப்பட்டேன். பின்னர் நான் என் முழுங்கால் படியிட்டு கண்ணீருடன், மன்னிக்கும்படி கேட்டேன். அவர் என் பாவங்களை மன்னித்து என்னை ஏற்றுக்கொண்டார், அவரே என் தேவன் மற்றும் என் சொந்த இரட்சகர், உடனடியாக நான் அவரை ஏற்றுக்கொண்டவுடன் என்னில் மிகப்பெரிய ஒரு சமாதானத்தை உணர்ந்தேன். என்னில் விவரிக்க முடியாத ஒரு சந்தோஷம் நிரம்பி வழிகிறது. அவர் என்னுடைய வேண்டுதலை கேட்டு என் பாவங்களை எல்லாம் மன்னித்து என்னை ஏற்றுக்கொண்டார். இதற்கு நான் உங்களுக்கு உதவுகிறேன். எங்களை அழைக்கவும். நீங்கள் கிறிஸ்துவில் வெற்றி வெறுவதற்காக நாம் ஒன்றாக ஜெபிக்கலாம். உங்கள் இருதயத்தில் ஆழ்ந்த சமாதானத்தை அனுபவியுங்கள். உங்களிடம் இருக்கும் எந்த பணம், இன்பம் மற்றும் பொழுதுபோக்கு எதுவும் தேவனுக்கு சமமாகாது. தேவனால் மட்டுமே உங்களுக்கு நிரந்தரமான சமாதானத்தை கொடுக்க முடியும். நம்பிக்கையுடன் உங்கள் தொடர்புக்கு தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

இதன் பொருள் :

- இயேசு இரட்சகர், அவர் இன்றும் இரட்சிக்கிறார். அவர் கடந்த காலத்தில் செய்தது போல.
- இயேசு குணப்படுத்துபவர், அவர் இன்றும் குணப்படுத்துகிறார் அவர் கடந்த காலத்தில் செய்தது போல.
- இயேசு பரிசுத்த ஆவியானவர், அவர் கடந்த காலத்தில் செய்ததைப் போலவே இன்றும் அவருடைய வார்த்தையை விசுவாகிக்கும் எவருக்கும் பரிசுத்த ஆவியை கொடுக்கிறார்.
- இயேசுவே தீர்வு, அவரால் தீர்க்க முடியும். அவர் கடந்த காலத்தில் செய்தது போல இன்றும் எந்த பிரச்சினையும் அவரால் தீர்க்க முடியும். நீங்களும் உங்கள் வாழ்க்கையில் உண்மையாக அனுபவிக்கலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்வளவு பெரியவர் மற்றும் நல்லவர் என்பதை அனுபவியுங்கள்.


உங்கள் ஜெப உதவிக்கு

சகோ.**O.மாரியப்பன்,** **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கூடாரம்**

13/8, M.சீகம்பட்டி, பொத்தப்பட்டி (Post), இளங்காகுறிச்சி (Via),

மணப்பாறை (Tk), திருச்சி (Dt) - 621 302

**Cell : 9345428644.**